# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 05.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 1628/SCIC/2023**

திரு. சுப்பிரமணியன் புகார்தாரர்
எண்.26/A1, யாதவர் தெற்கு புதுத்தெரு
வள்ளியூர்
திருநெல்வேலி - 627 117.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
பாளையங்கோட்டை.

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 01.02.2023 |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 02.03.2023 |
| 3. | மனுதாரரின் புகார் மனு | 28.04.2023 |
| 4. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 09.01.2025 |
| 5. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 13.02.2025 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), மாவட்டப் பதிவாளர் அலுவலகம், கொக்கிரகுளம், திருநெல்வேலி அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “பொருள் - திருநெல்வேலி மாவட்டம் வடக்கு வள்ளியூர்

பஞ்சாயத்துக்கு உட்பட்ட சர்வே எண்.1453/1B சொத்து முறப்பநாட்டின் பத்திரப் பதிவு செய்தது சம்பந்தமாக தகவல் - தொடர்பாக - மாண்புமிகு முதலமைச்சர் மனு எண்.3911422, நாள் 21/06/2022 மனுவின் தற்போதைய நிலை பற்றிய தகவல் தரவும்." என்பன போன்று 3 (மூன்று) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**3. இன்றைய (05/06/2025) காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரர் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து கலந்து கொண்டார். பொது அதிகார அமைப்பின் சார்பில், ஆணையத்தின் முன் திரு.சே.மு.மீரா மொஹிதீன், மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), பாளையங்கோட்டை அவர்கள் ஆஜரானார். மனுதாரர், தனது 01/02/2023 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு எவ்வித தகவலையும் பொதுத் தகவல் அலுவலர் வழங்கவில்லை என்றார். அதற்கு, பொதுத் தகவல் அலுவலர், 28/03/2023 தேயிட்டு, மனுதாரருக்கு தகவல் அனுப்பியதாகவும், அந்தக் கடிதம், மனுதாரரின் வீட்டின் கதவு பூட்டப்பட்டிருக்கிறது (Door locked) என அஞ்சல் துறையினரால் குறிப்பெழுதப்பட்டு, தமது அலுவலகத்திற்கு திருப்பப்பட்டு விட்டது என்று தெரிவித்து, அதற்கான சான்றுகளை ஆணையத்திடம் காண்பித்தார். இதனை மனுதாரர் ஆட்சேபித்தார். ஆனால் பொதுத் தகவல் அலுவலர், உரிய சான்றுகளை காண்பித்த காரணத்தினால் 28/03/2023 தேதியிட்ட தகவல் மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதை ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது.**

**4. மனுதாரர், மோசடியாக பதிவு செய்துள்ள ஆவணப் பதிவை இரத்து செய்ய வேண்டுமென்று கோரி, புகார் மனு அனுப்பியிருந்ததாகவும், அதன் தற்போதைய நிலை என்ன என்பது குறித்து, தகவல் வழங்க வேண்டுமென்றுதான், மனுதாரர் புகார் மனு அனுப்பியுள்ளதாகத் தெரிய வருகிறது. அதற்கு, பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரின் மனு, மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் நிலுவையில் உள்ளது. தற்போது உயர்நீதிமன்றம் பிரிவு 77A பிரிவை நிறுத்தி வைத்துள்ள காரணத்தினால், மாவட்டப் பதிவாளர் ஆவணத்தை இரத்து செய்யலாம் என்ற சூழல்/ அதிகாரம் தற்போது இல்லை என்றும் தற்போதைய நிலையில் மனுதாரரின் மனு மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலாது என மனுதாரரிடம் விவரித்ததோடு, இவ்விவரத்தை, மனுதாரருக்கும் தகவலாக அளித்துள்ளதாகவும் கூறினார்.**

**5. எனவே, பொதுத் தகவல் அலுவலரால் 28/03/2023 தேதியிட்டு, 25 நாட்களைக் கடந்து மனுதாரருக்கு தகவல் அனுப்பப்பட்டு உள்ளது என்பதைப் பொறுத்த மட்டில், அக்காலதாமதத்திற்கு தன்னை மன்னிக்குமாறு, பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்திடம் கோரினார். அதனை ஆணையம் ஏற்றுக் கொண்டது. எனவே, இப்புகார் மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். CP 1628/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர்
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
பாளையங்கோட்டை.

**புகார்தாரர்**

திரு. சுப்பிரமணியன்
எண்.26/A1, யாதவர் தெற்கு புதுத்தெரு
வள்ளியூர்
திருநெல்வேலி - 627 117.

RG/PC